## DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure )

--

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.181/2022 | அரசுத்தரப்பு | P.W.7 |
| பெயர் | அருண் | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | எல்லப்பன் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.08.2025.

2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுகோட்டை காமராஜபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பொம்மை வியாபாரம் செய்து வருகிறேன். 19.08.2021 தேதியில் லோடு ஏற்றுவதற்காக என்னை தேடி கொண்டு வந்தார்கள். நான் அம்மன் ஸ்டோர் இரும்பு கடைக்கு லோடு ஏற்ற சென்றேன். அந்த கடையை தீ வைத்து எரித்து விட்டார்கள். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. மணிகண்டனை எனக்கு தெரியாது. நான் அவரை பார்த்ததில்லை.

அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய கேட்டுக்கொண்டதன்பேரில் அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

போலிசார் என்னை விசாரித்தபோது கடந்த 19.08.2021 தேதி காலை 7.00 மணியளவில் நான் எனக்கு தெரிந்த நபரை பார்க்க வேண்டி புதுக்கோட்டை ரயில்வே ஸ்டேசன் வந்திருந்தேன். அப்போது அங்கு வந்திருந்த திருக்கோகர்ண காவல் ஆய்வாளர் எனக்கு அருகே நின்று கொண்டிருந்த நபரை விசாரித்து கொண்டிருந்தார். காலை 7.15 மணியளவில் என்னையும் வ.உ.சி நகர் 6ம் வீதியை சேர்ந்த தங்கவேல் மகன் சீனிவாசன் என்பவரையும் அழைத்து, விசாரித்துக் கொண்டிருந்த மணிகண்டன் என்ற சின்னமணி என்பவரை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்து அவர் எங்கள் முன்பாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம்

கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவரும் இந்த வழக்கின் மற்ற எதிரிகளும் பல இடங்களில் பாட்டிலில் பெட்ரோல் பிடித்து அதை தூக்கி எறிந்து கடை, வீடுகளுக்கு மற்றும் வாகனங்களுக்கு சேதம் ஏற்படுத்தியதாக ஒப்புக் கொண்டார் என்றும் அதற்கு சாட்சியாக இருந்து தான் மணிகண்டன் என்ற சின்னமணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சீனிவாசன் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. தற்போது இந்த எதிரிகளுக்கு பயந்து கொண்டு உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– அருண்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.